# பொங்குமொளி மங்காது...உதயசூரியன்!
# ஒருபோதும் தூங்காது...உதயசூரியன்!

கூத்திகளின் வீச்சில்
கனல்பறக்கும் தன்மைபோல்
கருத்துகளின் வீச்சில்
காந்தத்துவப் பேச்சில்
முத்தமிழின் மூச்சில்
முக்கனலும் தெறிக்க
மூலை முடுக்கெல்லாம்
முழங்கிய முத்தமிழறிஞர்..
பீடுமிகு கலைஞர்
பிறந்தநாள் இன்று!

**சாதிக்க முடியாத
சாதனைகளின் தொகுப்பாய்
போதிக்கவே வந்த
புதுமைகளின் வகுப்பாய்
சீர்திருத்த வாதிகளின்
செம்மாந்த பதிப்பாய்
இலக்கியம் அரசியல்
இரண்டின் கலப்பாய்
தமிழுலகம் பெற்ற
தனிப்பெரும் சிறப்பாய்
வாழ்ந்து மறைந்த
வலிமையின்பேர்..கலைஞர்!**

'பாகற்காய் போல்கசக்கும்
பகுத்தறிவைத்' தமிழர்களின்
ஆகத்தில், உணர்வில்
அன்றாடச் செயல்முறையில்,
ஆகச் சிறந்த
அழகழகுத் தமிழ்நடையில்
ஊட்டி.. விழிதிறந்த
உவமைகளின் பேரரசர்
கலைஞர்!

வெள்ளிக் குடத்தில்
வெறுநீர் கலவாது
பால்நிரப்பி வைத்த
பான்மை போல்..


சங்கத் தமிழ்க்குடத்தில்
சற்றும் மிகையின்றிக்
கவிப்பால் நிரப்பிக்
கட்டுரைகள் செய்வித்து

தவிப்பால் வருவோர்க்குத்
தமிழ்ப்பால் ஈதென்று
குவிப்பார் ஒருதலைவர்
அவர்பேர் சொல்லென்றால்..
அகிலமே சொல்லும்
அவர்நம் கலைஞர்.. என்று!

**கழகத் தமிழைக்
கடைமடைத் தமிழனுக்கும்
பரவசப் பந்திவைத்து
பகுத்தறிவைச் சிந்திவைத்து
அந்திவைத்த நிலவைப்போல்
அமிழ்த்தைக் குழைத்துவைத்து
இலக்கணத் தமிழையும்
எளிதாய்ப் புரியவைத்து**

**எழுதுகோல் செங்கோல்
இரண்டாலும் எமையாண்ட
கலைஞரை நினைத்தால்..
கண்ணீர் கசிகிறது!**

உலகத்தின் சுற்றளவே
ஒன்றேமுக்கால் அடிதான்



என்று
அறிவுலகைத் திகைப்பிக்கும்
அறநூலைத் தந்தவர்க்கு
கோட்டம் கண்டு
குமரியிலே சிலைகண்டு
கோலமிகு தமிழில்
குறளோவியம் கண்டு
வானளவு புகழ்படைத்த
வண்ணமிகு தலைவருடன்
வாழ்ந்தோம் நாமென்னும்
வரலாறே இனிக்கிறது!

**தானே வெடித்துத்
தமிழாய்க் கிளம்பிய
ஒளிவெள்ளம் கலைஞரை
உச்சரிக்கும் போதே
உணர்வெல்லாம் புதுவெள்ளம்
ஒடிப் பாய்கிறது!**

அந்த
வெள்ளப் பாய்ச்சலில்
விழிபெற்றோர் மொழிபெற்றோர்
வீறுணர்வு பெற்றோர்
தன்னைத் தானுணரும்
தனித்தன்மை பெற்றோர்
ஆதிக்க நெருப்பை
அவிக்கும் கலைகற்றோர்
எத்தனை பேர்..எத்தனை பேர்!

காந்தக் குரலழகும்
ஏகாந்த விரலழகும்
சோலைச் சொல்லழகும்
சொக்கவைக்கும் மொழியழகும்
வேலை நிகர்த்திருக்கும்
வேகச் செயலழகும்
மாலை வானத்தின்
மஞ்சள் தோளழகும்
பட்டி தொட்டியெல்லாம்
பதிவுற்ற காலழகும்
மறையவில்லை இன்னும்
மனத்தை விட்டு!

கோடிக் கணக்கான
மக்களைக் கண்டவர்
இலட்சக் கணக்கான
பக்கங்கள் எழுதியவர்

ஆயிரக் கணக்கான
மேடைகளில் முழங்கியவர்

நூற்றுக் கணக்கான
களங்களில் இயங்கியவர்

**அன்னைத் தமிழகத்தை
அறிவுலகத் தலைநகராய்
மாற்றி வடிவமைத்த
மாபெரும் தலைவர்
நம் கலைஞர்!**

அவரின்
தங்க மகுடத்தில்



டாக்டர்
எஸ்.ஜெகத்ரட்சகன்
எம்.பி.
மேனாள் ஒன்றிய
இணையமைச்சர்

மின்னியவை எல்லாமே
வேர்வை வைரங்கள் என்பதைக்
காலச் செப்பேடு
குறித்து வைத்திருக்கிறது!

**ஆற்றல் உள்ளது
நிலைத்து நிற்கும் என்னும்
பரிணாமக் கொள்கைப்படி
காற்றுள்ள வரைக்கும்,
மண்ணுக்குக் குடைபிடிக்கும்
வானுள்ள வரைக்கும்,
வாழும்நம் கலைஞரின்
வரலாற்றுப் புகழ்!**

அவர் படைத்த காவியங்கள்
அவர் வரைந்த ஓவியங்கள்
அவர் வடித்த சிற்பங்கள்
அவர் புனைந்த சித்திரங்கள்
அவர் போட்ட சட்டங்கள்
அவர் தீட்டிய திட்டங்கள்
அவரது எண்ணங்கள்
அவர் கொடுத்த வண்ணங்கள்
அத்தனையும் கலந்த
மொத்த அழகுதான்..
இற்றைத் தமிழகமாய்
இருக்கிறது என்பதை
எண்ணும் போதே
இரும்பாகிறது இதயம்!

தினம் தினம்
மேற்கிலே விதைக்கப்பட்டு
கிழக்கிலே முளைத்தெழும்
சூரியப் பந்து
வந்து வந்து அவர்புகழை
வீசிப் பேசிவிட்டுத்தான்
விடைபெறுகிறது!

நிலத்தில் வளரும்
நெற்கதிர் உதிரும்!
பொன்னொளி வீசும்
பொற்கதிர்
ஒருபோதும் உதிராது
என்பதை
மன்பதைக்குச் சொன்ன
மன்னவர் அவர்!

வெற்றிகளை அணிந்தே
வீறுலா நடத்தியவர்!
தோல்விகளின் முதுகிலும்
துவளாமல் ஏறிச்
சவாரி செய்து
சரித்திரம் படைத்தவர்!

காயங்களை எல்லாம்
பாடங்கள் ஆக்கியவர்!
தழும்புகளை எல்லாம்
தடங்கள் ஆக்கித்
தளபதிக்குத் தந்து

தடங்கல் இல்லாமல்
தலைவர் ஆக்கியவர்!
தங்கத் தமிழகத்தின்
முதல்வர் ஆக்கியவர்!

உழைப்பு என்பதன்
உன்னதப் பொருள்வடிவம்
உறுதி என்பதன்
உண்மைத் திருவுருவம்
கொள்கை என்பதன்
கோலத் தமிழ்ப்படிவம்
இவர்தாம் என்பதை
செகமெலாம் உணரச்
செதுக்கிச் செதுக்கிச்
சித்தன்ன வாசல்
சிற்பம்போல் செய்தவர்!

**அவரால் சிறந்த
அருமைத் தமிழகம்
இவரால் உயர்ந்து
இமயமே அதிர்ந்து
நித்தமும் நிமிர்ந்து
பார்த்திட வளர்ந்ததே...
பாரெலாம் வியந்ததே...
அதிசயம் நடந்ததே..
அற்புதம் மலர்ந்ததே..
திராவிடம் ஒலித்ததே
கனவெல்லாம் பலித்ததே..
தமிழகம் ஜொலித்ததே..**

இன்றென்ன ஆயிற்று
எனுமாறு இப்போது
தடுமாறி வீழ்ந்ததே..
தமிழகம் தாழ்ந்ததே
என்று
குமுறித் துடிக்கிறது
குறிக்கோள் நெஞ்சங்கள்!
கதறி வெடிக்கிறது
கருத்தியல் உள்ளங்கள்!
பதறி வடிக்கிறது
கண்ணீர் வெள்ளங்கள்!

ஆயினும்..என்ன?
அறப்போராளி ஒருவன்
ஆயுள் உள்ளவரை
ஆயுதம் இழக்கமாட்டான்!

விட்டில் பூச்சிகளால்
விளக்கு அணையலாம்!
விடியலை அறிவிக்கும்
அதிகாலைச் சூரியன்
அணைந்து போகாது!

ஈசல்களின் வருகை
ஏற்படுத்தும் தாக்கம்
வந்த வேகத்தில்
வழிந்துவிடும் என்பதைப்
பருவ காலங்களில்
பார்த்திருக்கிறோம் நாம்!

அறியாமல் செய்த
அதர்மப் பிழைகளை
அறிகின்ற வேளைவரும்!
அப்போது
அறியாமல் செய்த
அரசியல் பிழைகளுக்குப்
பரிகாரம் செய்யப்
பாய்வார்கள் தமிழ்மக்கள்!

வாராது வந்த
மாமணியைத் தோற்றோமே..
சீரார்ந்த தளபதியைச்
செந்தமிழர் குலபதியைப்
போற்றாமல் வீழ்ந்து
புழுதியிலே சாய்ந்தோமே..

என்று தமிழ்மக்கள்
எழுகின்ற காலம்
தூரத்தில் இல்லை!
தொடராது தோல்வி!

நம்பிக்கை என்னும்
நந்தா விளக்கு
உள்ள வரையில்
உலகம் நமக்கு!

**புறப்படு தோழனே
தமிழகம் மீட்போம்!
தளபதி தலைமையில்
தமிழ்நாடு காப்போம்!**

நம் பிதாமகர்
பிறந்த நாளில்
சத்தியம் செய்து
சபதம் ஏற்போம்!

இலை உதிரும்!
அலை அடங்கும்!
மீண்டும்
தலைநிமிரும் தமிழ்நாடு!

**உறுதியாய்ச் சொல்கிறேன்:
பொங்குமொளி மங்காது
உதய சூரியன்!
ஒருபோதும் தூங்காது
உதய சூரியன்!**